**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 - 2020**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 18 ஆம் திகதிய 3625-(எஸ்ஆர்ஐ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை மற்றும் 3626-(சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 43,734 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 37,951 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,783 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ரூபா 105,881,458 பெறுமதியான வட்டி மற்றும் பொறுப்பளிப்பு கட்டணம், நிதிக் கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கோரப்படும் வரை கணிப்பீடுகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | களுகங்கை மற்றும் மொரகஹகந்த பரிமாற்றல் கால்வாய் நிர்மாணத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 89 சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 52 சதவீத செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | செயற்திட்ட செயற்பாடுகளில் எதிர்பாராத தாமதங்கள். அது மேலதிக நிதியீட்ட தேவையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. மேலும் அதனை விவசாயரீதியான நடவடிக்கைகளுக்கும் தாக்கமளித்திருந்தது. | கருத்துரையின் கீழ் உடன்படவில்லை. உள்நாட்டு தொழிலாளர்கள் தொற்றிற்கு உட்பட்டிருந்தமை மற்றும் சீன தொழிலாளர்களுக்கும் நடமாடும் கட்டுப்பாடுகள் விதித்தமையின் காரணமாகவும், கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையினாலும் 2020 ஆம் ஆண்டின் செயல்முன்னேற்றத்திற்கு மிகவும் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | நிர்மாண வேலைகளை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற எதிர்பாராத தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 முதல் 2024 வரை 03 கட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 முதல் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதனால் 03 கட்டங்களின் கீழ் இன்னும் 08 ஒப்பந்த தொகுதிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாடுகளில் எதிர்பாராத தாமதங்கள். அது மேலதிக நிதியீட்ட தேவையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. மேலும் அதனை விவசாயரீதியான நடவடிக்கைகளுக்கும் தாக்கமளித்திருந்தது. | 03 கட்டங்களில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக வெளிநாட்டு வள திணைக்களம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேவையான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிடப்பட்ட ஒப்பந்த பொதி மதிப்பீடு மற்றும் பூர்த்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகளை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற எதிர்பாராத தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 – 2020 இன் போது அமுல்படுத்துவற்கு திட்டமிடப்பட்ட வலுப்படுத்தும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் மதியுரைச் சேவை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீர் வள முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் உச்ச நலன்கள் என்பவற்றிற்கு மிகவும் பாதமகமாக தாக்கமளித்திருந்தது. | இந்த மதியுரை சேவைக்காக வரைவு அறிக்கை மதிவுரையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. காணப்பட்ட வரையரைகளின் காரணமாக பிரதான தரப்பினருடன் தேசிய செயலமர்வுகளை நடாத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கும் செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தது. எனினும், 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அளவில் இந்த ஆய்வின் விடயப்பரப்பை உறுதிப்படுத்துவதற்கு மதிவுரையாளர் எதிர்பார்த்துள்ளார். | தாமதங்கள் இன்றி உரிய காலஎல்லையின் பிரகாரம் மதியுரைச் சேவைகளை அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர்/திசெம்பர் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆரம்ப விழாவின் 02 ஆவது பகுதியின் மத்திய கால மீளாய்வு செயற்பாடுகள் மற்றும் பகுதி 1 இன் மீளாய்வு செயற்பாடுகளின் பிரகாரம் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு அ.டொலர் 400 மில்லியன் மேலதிக நிதி தற்போது தேவையாக இருந்தமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடப்பட்ட மேலதிக நிதி | மேலதிக நிதியீட்ட தேவையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அவ்வாறே நிகழ்ச்சித் திட்டத்தின் சகல செயற்பாடுகளும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், எதிர்பார்த்த இறுதி விளைவுகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | உங்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காரணங்கள் திறைசேரி செயலாளரை உள்ளடக்கிய திறைசேரி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது. விரிவான கலந்துரையாடல் சிலவற்றின் பின்னர் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, | நிகழ்ச்சித் திட்டத்தினால் கடன் உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட கடன்தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட வேண்டும். ஒப்பந்த பெறுமதி அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை விஞ்சுமாயின் நிகழ்ச்சித் திட்டத்தில் மேலதிக நிதியத்தை தயாரித்து கொள்வதற்கோ அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவைக்கான இறுதி இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. மேலதிக நிதிக்காக இறுதி இணக்கப்பாடு<br><br>காணப்படாமை, அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையை விஞ்சி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதனால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அ.டொலர் 114 மில்லியன் இற்காக சமனான மூலதன வசதிகள் வழங்குபவரை ஈடுபடுவதற்கு தவறியிருந்தமையால் எதிர்காலத்தில் நிதியத்தில் பற்றாக்குறையொன்று ஏற்பட முடியும். மேலதிக நிதி தேவை ஏற்பட முடியும். அவ்வாறே நிகழ்ச்சித் திட்டம் ஏற்பட முடியும். | | | |
| (ஆ) | பகுதி 1 மற்றும் 2 இன் கீழ் சிவில் வேலை பகுதிகளுக்காக அ.டொலர் 306 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அ.டொலர் 432 மில்லியன் தொகையான ஒப்பந்தம் கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இன் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. அதனால் சிவில் வேலைக்கான கடன் தொகை அங்கீகரித்த எல்லையினை விட அ.டொலர் 126 மில்லியனால் அதாவது 41 சதவீதத்தினால் விஞ்சியிருந்தது. | அது மேலதிக நிதியீட்ட தேவையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதி 1, 2 மற்றும் 3 இல் காணப்படுகின்ற ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியத்தின் பிரகாரம் உள்ளீர்க்கப்படாத செலவினங்கள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களுக்காக சந்தர்ப்பம் அளிப்பதற்கு பகுதி 1 மற்றும் 2 இனை மீண்டும் திட்டமிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன், கட்டம் 3 இன் உன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது | நிகழ்ச்சித் திட்டத்தினால் கடன் உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட கடன்தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட வேண்டும். ஒப்பந்த பெறுமதி அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை விஞ்சுமாயின் நிகழ்ச்சித் திட்டத்தில் மேலதிக நிதியத்தை தயாரித்து கொள்வதற்கோ அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் வரிசை அமைச்சின் | நம்பமுடியாத விடயங்கள் உருவாகியிருந்ததுடன் தீர்மானம் | அமைச்சு மாற்றமடைந்தமை, முன்னர் மேற்கொள்ளப்பட்ட | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கை சரியான |

செயலாளரினால் அங்கீகரிக்கப்படவில்லை. அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் ரூபா 10,000 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், திறைசேரியில் இருந்து ரூபா 16,627 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித் திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் ரூபா 10,447 மில்லியன் தொகை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. எனினும், திறைசேரி அச்சிடல் பிரதிகளின் பிரகாரம் செலவினம் ரூபா 11,329 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. அதனால் நிகழ்ச்சித் திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைக்கும் திறைசேரி அச்சிடல் பிரதிக்கும் இடையே ரூபா 882 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

எடுப்பது தொடர்பில் மிக பாதகமாக தாக்கமளித்திருந்தது.

கறைநிரப்பு நிதிஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு விஷேட நிபுணர்கள் விலகியமை போன்றவற்றுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் மாறியமை போன்றவற்றின் காரணமாக ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. எதிர் காலத்தில் இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அலகினால் பேணிச் செல்லப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறிக்கையின் செலவினம் ரூபா 10,447 மில்லியன் தொகை செயல்முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், திறைசேரி புத்தகங்கள் மூடப்பட்டதன் பின்னர் இறுதி அச்சிடல் குறிப்பில் காண்பிக்கப்படுகின்ற செலவினம் ரூபா 11,329 மில்லியன் ஆகும். நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அலகினால் கணக்கு புத்தகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்காத ஆசிய அபிவிருத்தி

எண்ணிக்கையின் அடிப்படையில் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன வரிசை அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நேர் கொடுப்பனவுகள் இந்த வேறுபாடாகும். செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கும்போது அவ்வாறான தகவல்கள் நிகழ்ச்சித் திட்ட மகாமைத்துவ அலகிற்கு கிடைத்திருக்கவில்லை. | |
| (ஈ) | 2020 திசெம்பர் மாத்தின் போது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கிரயம் ரூபா 43,279 மில்லியன் தொகையான UECP-ICB 02A ஒப்பந்த பொதி 2020 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | முறைமை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பாதகமானதாக தாக்கமளித்திருந்தது. | UECP-ICB- 2A ஒப்பந்தம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அரசாங்கத்தின் விரைவான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் உயர்மட்ட உத்தியோகத்தர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்பற்றுதல் வேண்டும். செயல்நடவடிக்கைத் திட்டம் தற்போதைய தேவைக்கு இணங்க உரிய அங்கீகாரத்துடன் திருத்தப்பட வேண்டும். |